இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 09.01.2026

# பழனிசாமி மடிக்கணினி கொடுத்தாரா?

பத்து லட்சம் மாணவர்களுக்கு மடிக்கணினியை மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொடுக்கத் தொடங்கி இருப்பதை எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமியால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. தினந்தோறும் பேட்டி என்ற பெயரால் உளறல்களைச் செய்து கொண்டு இருக்கிறார் பழனிசாமி.

★ நாங்கள் 52 லட்சம் மடிக்கணினி கொடுத்தோம்.

★ நாங்கள் தான் அந்த திட்டத்தைத் தொடங்கினோம்.

★ தேர்தலுக்காக கொடுக்கிறார்கள் - என்றெல்லாம் வாய்க்கு வந்ததைச் சொல்லி இருக்கிறார்.

தனது ஆட்சி காலத்தில் 2019 ஆம் ஆண்டே மடிக்கணினி வழங்கும் திட்டத்தை நிறுத்திவிட்டவர்தான் பழனிசாமி. 2019, 2020, 2021 ஆகிய ஆண்டுகளில் முதலமைச்சராக இருந்தவர்தான் பழனிசாமி. அப்போதெல்லாம் அவர் மடிக்கணினியை ஏன் தரவில்லை?

**55 ஆயிரம் மடிக்கணினிகளை மாணவர்களுக்கு வழங்காமல் வீணடித்தவர்தான் எடப்பாடி பழனிசாமி. அ.தி.மு.க. ஆட்சியில் 68 கோடி ரூபாயில் வாங்கிய 55 ஆயிரம் மடிக்கணினிகள் வீணடிக்கப்பட்டதை CAG என்ற இந்தியத் தலைமைக் கணக்குத் தணிக்கை அறிக்கை வெளிச்சம் போட்டுக் காட்டியது. இதனைச் சுட்டிக் காட்டி மாண்புமிகு அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் அறிக்கை கொடுத்த பிறகும் பழனிசாமி தனது நாவை அடக்கவில்லை.**

எடப்பாடி பழனிசாமி ஆட்சியில் நடந்த மடிக்கணினி முறைகேட்டை அம்பலப்படுத்தியது CAG அறிக்கை. இந்த அறிக்கையானது 2023 ஏப்ரலில் சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

**2017-2018-ஆம் ஆண்டு போட்டித் தேர்வுக்குத் தயாரான 12-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மடிக்கணினிகள் வழங்க எல்காட் நிறுவனம் மூலம் 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மடிக்கணினிகள் கொள்முதல் செய்யப்பட்டன. அதில், 8 ஆயிரத்து 79 மடிக்கணினிகள் மட்டுமே மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. 55 ஆயிரம் மடிக்கணினிகளைத் தரவில்லை. அப்படியே குப்பையில் போட்டு விட்டார்கள். இதனால், 68 கோடியே 71 லட்சம் ரூபாய் நட்டம் ஏற்பட்டது என CAG அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.**

CAG அறிக்கையில் 53-ஆம் பக்கத்தில் மடிக்கணினிகளின் தேவை, கொள்முதல் மற்றும் விநியோகம் தொடர்பாக அட்டவணை ஒன்று வெளியிடப்பட்டிருக்கிறது.

**அதில், எடப்பாடி பழனிசாமி ஆட்சியில் 2017 - 2018 முதல் 2020 - 2021 வரை 11 மற்றும் 12-ம் வகுப்பில் 18.60 லட்சம் தகுதியான மாணவர்கள் இருந்தார்கள். ஆனால், இந்தக் காலகட்டத்தில் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட மடிக்கணினிகளின் எண்ணிக்கை 14.83 லட்சம் மட்டுமே. 3.77 லட்சம் மாணவர்களுக்கு வழங்கவில்லை. 20 சதவிகித மாணவர்களுக்கு வழங்காமல் புறக்கணித்தார்கள்.**

2017-2018 ஆம் ஆண்டில் 12 ஆம் வகுப்புத் தேர்வில் தேர்ச்சி பெற்ற 2.32 லட்சம் மாணவர்கள், பள்ளிப் படிப்பை முடிக்கும் வரை மடிக்கணினிகளைப் பெறவில்லை. பழனிசாமி தரவில்லை. இதையெல்லாம் மக்கள் மறந்திருப்பார்கள் என்று நினைத்து பேட்டி தருகிறார் பழனிசாமி.

2018 ஆம் ஆண்டுக்குப் பிறகு இத்திட்டத்தை முடக்கியவரே பழனிசாமிதான். இப்போது, 'தேர்தலுக்காக தி.மு.க. அரசு கொடுக்கிறது' என்கிறார்.

**"நிதி நிலைமை சரியானதும், மடிக்கணினி திட்டம் தொடங்கப்படும்" என்று தி.மு.க. அரசு தொடர்ந்து சொல்லி வந்தது. "மடிக்கணினி திட்டத்தை முடக்கவில்லை, அது தொடரப் போகும் திட்டம் தான்" என்பதை அமைச்சர்கள் சொல்லியே வந்தார்கள். இலவசமாக மடிக்கணினி வழங்கப்படும் என்று தி.மு.க. வெளியிட்ட வாக்குறுதியில் இருக்கிறது. "தமிழ்நாட்டில் மேல் நிலைப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயின்று வரும் மாணவர்களுக்கு இணையத் தள வசதியுடன் கூடிய மடிக்கணினிகள் அரசு செலவில் வழங்கப்படும்"** என்று சொல்லப்பட்டு உள்ளது. எனவே தேர்தல் வாக்குறுதியில் சொல்லப்பட்ட திட்டத்தைத்தான் கழக அரசு இப்போது நிறைவேற்றுகிறது.

இந்த ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட போதே, "20 லட்சம் மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கப்படும்" என்று வெளிப்படையாகவே அறிவிக்கப்பட்டது. கடந்த ஏப்ரல் மாதம் முதல் இதற்கான அடிப்படைப் பணிகள் நடைபெற்றன.

அண்ணா பல்கலைக்கழகம், தேசிய தகவல் மையம் (National Informatics Centre), ஐ.ஐ.டி. மெட்ராஸ் மற்றும் தமிழ்நாடு அரசின் பல்வேறு உயர் கல்வி நிறுவனங்களைச் சார்ந்த தொழில்நுட்ப வல்லுநர்கள் குழுவைக் கொண்டு, லேப்டாப் உற்பத்தி நிறுவனங்களிடம் மூன்று முறை கலந்தாய்வு கூட்டமும், 7 முறைக்கு மேல் வல்லுநர் குழுக் கூட்டமும் நடத்தி மாணவர்களுக்கு Artificial Intelligence (AI) பயன்பாட்டிற்கு உகந்த வகையில் லேப்டாப் இருக்க வேண்டும் என்பதையே அடிப்படையாகக் கொண்டு Technical Specifications முடிவு செய்யப்பட்டுள்ளது. தகுதியான நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டன. அவர்கள் தயாரித்து வழங்கத் தொடங்கியதும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாணவர்களுக்கு கொடுக்கத் தொடங்கினார்கள்.

**மடிக்கணினி கொடுக்கப் போகிறார்கள் என்பதை முன்கூட்டியே தெரிந்துக் கொண்ட பழனிசாமி, "தமிழ்நாட்டு மாணவர்களுக்கு இப்போது ஏன் மடிக்கணினி கொடுக்கிறீர்கள்?" என்றும் சில வாரங்களுக்கு முன்பு கேட்டார். ஏன் கொடுக்கிறீர்கள் என்று கெட்ட எண்ணத்தோடு கேட்டவர்தான் பழனிசாமி.**

அதற்கு அப்போதே மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி அவர்கள் சரியான பதிலடி கொடுத்தார்கள். **"தமிழ்நாட்டு மாணவர்கள் படித்து முன்னேறி விடக் கூடாது என்ற பாசிச பா.ஜ.க.வின் எண்ணத்தை அவர்களின் வழிகாட்டுதல்படி எடப்பாடி பழனிசாமி தொடர்ந்து வெளிப்படுத்தி வருகிறார். கல்லூரி மாணவர்களுக்கு எப்படியாவது மடிக்கணினி கிடைப்பதை வரவேற்கும் பரந்த மனப்பான்மை கூட இல்லாத எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி இதனை எப்படியாவது சீர்குலைத்து விட முடியாதா என்று முயற்சிக்கிறார்"** என்று மண்டையில் கொட்டிச் சொன்னார். அப்படியும் பழனிசாமிக்கு உறைக்கவில்லை என்பதையே அவரது தினப்படி உளறல்கள் எடுத்துக் காட்டுகின்றனர்.

**'தான் திருடி, பிறரை நம்பார்' என்பதைப் போன்றவர்தான் எடப்பாடி பழனிசாமி என்பதை தமிழ்நாடு அறியும்.**

●●



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.1.2026) திண்டுக்கல் மாவட்டம், வேலுநாச்சியார் வளாகத்தில் நடைபெற்ற அரசு விழாவில், பல்வேறு துறைகளின் சார்பில் 2,62,864 பயனாளிகளுக்கு 1082 கோடியே 86 இலட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் இ.பெரியசாமி, கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், கே.ஆர்.பெரியகருப்பன், அர.சக்கரபாணி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆர்.சச்சிதானந்தம், செல்வி ஜோதிமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பெ.செந்தில்குமார், காந்தி ராஜன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல் ஆனந்த், திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.1.2026) திண்டுக்கல் மாவட்டம், வேலுநாச்சியார் வளாகத்தில் நடைபெற்ற அரசு விழாவில், பல்வேறு துறைகளின் சார்பில் 2,62,864 பயனாளிகளுக்கு 1082 கோடியே 86 இலட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் இ.பெரியசாமி, கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், கே.ஆர்.பெரியகருப்பன், அர.சக்கரபாணி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆர்.சச்சிதானந்தம், செல்வி ஜோதிமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பெ.செந்தில்குமார், காந்தி ராஜன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல் ஆனந்த், திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ரூ. 4.58 கோடியில் நவீன வசதிகளுடன்

# புதுப்பிக்கப்பட்ட சென்னை கன்னிமாரா நூலகம்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்து பார்வையிட்டார்!

**சென்னை, ஜன. 9-**

**தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 4.58 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அறிவியல் மையம், மின்தூக்கி வசதி, சொந்த நூல் படிக்கும் பிரிவு, நவீன மாநாட்டு கூடம், நவீன சிறுவர் நூலகம், குடிமையியல் பிரிவு ஆகிய வசதிகளுடன் புதுப்பிக்கப்பட்ட சென்னை கன்னிமாரா நூலகத்தினை திறந்து வைத்து பார்வையிட்டார்.**

"நூலகம் என்பது ஒரு மனிதனின் வாழ்நாள் முழுவதற்குமான பல்கலைக்கழகம், நூலகங்கள் தான் அறிஞர்களை உருவாக்கும் தொழிற்சாலைகள்" என்பது பேரறிஞர் அண்ணா அவர்கள் தெரிவித்த பொன்மொழியாகும்.

சென்னை கன்னிமாரா பொது நூலகம் 1890 ஆம் ஆண்டு அன்றைய சென்னை மாகாணத்தின் ஆளுநராக இருந்த பாபி ராபர்ட் பாரன் கன்னிமாரா அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு 1896 ஆம் ஆண்டு டிசம்பர் 5 ஆம் தேதி தொடங்கப்பட்டு 129 ஆண்டுகள் கடந்து 130 வது ஆண்டில் தடம் பதித்து சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

பேரறிஞர் அண்ணா அவர்களால் "கன்னிமாரா நூலகம் என்னை கனிய வைத்த தாயகம்" என்று போற்றப்பட்ட சிறப்பு மிக்க நூலகமாகவும் செயல்பட்டு வருகிறது.

கன்னிமாரா பொது நூலகம் தமிழநாட்டின் முதல் பொது நூலகமாகவும் மாநில மைய நூலகமாகவும் செயல்பட்டு வருகிறது, இந்நூலகம் புத்தக ஆர்வலர்களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும், போட்டிதேர்வு மாணவ, மாணவியர்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக திகழ்கிறது.

இந்நூலகத்தின் கட்டிடக்கலை மிகவும் சிறப்பு வாய்ந்ததாக அமைந்துள்ளது, இங்கு 1553 ஆம் ஆண்டு வெளியான நூல் முதல் மிக பழமையான நூல்கள் பாதுகாக்கப்பட்டு வருகிறது. 1954 ஆம் ஆண்டு இந்திய அரசு, நூல்கள் மற்றும் நாளிதழ்கள் விநியோகச் சட்டத்தின்படி (Delivery of Books and Newspapers Act - 1954) இந்தியாவிலுள்ள நான்கு தேசிய நூலகங்களான கொல்கத்தா, தில்லி, மும்பை மற்றும் சென்னை கன்னிமாரா பொது நூலகம் ஆகிய நூலகங்களுக்கு நூல் பதிப்பாளர்கள் மற்றும் நாளிதழ்கள் பதிப்பாளர்கள் அனைவரும் தங்கள் வெளியீடுகளை இலவசமாக ஒரு பிரதி அனுப்பி வைக்க வேண்டும். இச்சட்டத்தின்படி பெறப்பட்ட தமிழ், ஆங்கிலம் மற்றும் தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி, மராட்டி, உருது, பெங்காலி, சமஸ்கிருதம் உள்ளிட்ட பல்வேறு மொழி நூல்கள் இந்த நூலகத்தில் இடம் பெற்றுள்ளன.

இந்த நூலகத்தில் 9.5 லட்சம் நூல்களும், 1.50 லட்சம் உறுப்பினர்களும் உள்ளார்கள். ஒரு நாளைக்கு சராசரியாக 500 க்கும் மேற்பட்ட போட்டி தேர்வு மாணவர்கள் உள்பட 1,000 மேற்பட்ட வாசகர்கள் வருகை புரிகிறார்கள். இங்கு போட்டித் தேர்வு மாணவர்கள் பயன் பெறும் வகையில் இணையதள வசதி, இலவச Wi-Fi வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்நூலகத்தின் நூற்றாண்டை போற்றும் வகையில் கட்டப்பட்ட நூற்றாண்டு விழா கட்டடத்தை 12.9.1997 அன்று அன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார்.

நூலகத்தின் புராதன கட்டடத்தின் நிலையை சிறப்பித்து மேம்படுத்தும் வகையில் புதுப்பிக்கப்பட்ட கட்டடத்தை அன்றைய உள்ளாட்சித்துறை அமைச்சரும் இன்றைய தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் 22.11.2006 அன்று திறந்து வைத்தார்.

இந்த நூலகத்தில் நாளிதழ் பருவஇதழ் பிரிவு, குடிமைப்பணி பிரிவு, மொழிப்பிரிவுகள், நூல் இரவல் வழங்கும் பிரிவு, நூல்கள் மற்றும் நாளிதழ்கள் விநியோகச் சட்ட நூல்கள் பிரிவு ஆகியவை செயல்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி 4.58 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்ட நவீன சிறுவர் நூலகம், அறிவியல் மையம், புதுப்பிக்கப்பட்ட குடிமையியல் பிரிவு, மின்தூக்கி வசதி , சொந்த நூல் படிக்கும் பிரிவு, நவீன மாநாட்டு கூடம் ஆகியவற்றுடன் கன்னிமாரா நூலகம் புதுப்பிக்கப்பட்டது.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.1.2026) சென்னை எழும்பூரில் 4.58 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அறிவியல் மையம், மின்தூக்கி வசதி, சொந்த நூல் படிக்கும் பிரிவு, நவீன மாநாட்டு கூடம், நவீன சிறுவர் நூலகம், குடிமையியல் பிரிவு ஆகிய வசதிகளுடன் புதுப்பிக்கப்பட்ட கன்னிமாரா நூலகத்தினை திறந்து வைத்து பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யா மொழி, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், பள்ளிக்கல்வித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன் பொது நூலகத் துறை இயக்குநர், திருமதி ச.ஜெயந்தி, சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழுத் தலைவர் கவிஞர் மனுஷ்ய புத்திரன், பள்ளிக் கல்வி இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், தொடக்கக்கல்வி இயக்குநர் முனைவர் பூ.ஆ.நரேஷ் உள்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

